**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 31 of 2024

Depositions of PW - 6 witness for ________ { Prosecution / Defence / Court }

Name : பால்ராஜ்

Father's Name : பழனிசாமி

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th **day of February** 2026.

**(1-3 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் ஜல்லிபட்டியில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது கிடையாது. கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையொப்பம் மட்டும் என்னுடையது.கடந்த 06.9.2023 ஆம் தேதி காலை 9:30 மணியளவில் நானும் எனது நண்பர் வீர குமார் என்பவரும் பச்சாகவுண்டர் பாளையம் பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்த பொழுது மூன்று நபர்கள் இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். போலீசார் அவர்களை நிறுத்தி விசாரித்தார்கள். மேற்படி விசாரித்த பொழுது அவர்கள் வந்த இருசக்கர வாகனத்தில் வண்டி முழுவதும் பிராந்தி பாட்டில்கள் இருந்தது.

2. அப்பொழுது எதிரிகளை போலீசார் விசாரித்த பொழுது கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பாக டாஸ்மாக் கடையை உடைத்து மேற்படி பாட்டில்களை எடுத்ததாக கூறினார்கள் பின்னர் எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் எங்கள் இருவர் முன்னிலையிலும் பதிவு

செய்து எதிரிகள் ஆஜர் செய்த 16 பாட்டில்களை கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினார்கள். கைப்பற்றுதல் மகஜர் EX.P5 குறியீடு செய்யப்படுகிறது .அதில் நானும் எனது நண்பர் வீரக்குமார் என்பவரும் கையொப்பம் செய்தோம். ஆஜர் எதிரிளை தான் போலீசார் அன்றைய தினம் விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**(சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டு சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 06.09.2023 ஆம் தேதி காலை 9:30 மணிக்கு நானும் எனது நண்பர் வீரகுமார் என்பவரும் பச்சார் கவுண்டர் பாளையம் பேருந்து நிறுத்தத்தில் இருந்த பொழுது அவ்வழியாக வந்த எதிரிகளை போலீசார் தடுத்து நிறுத்தி விசாரணை மேற்கொண்டார்கள் என்றும் அப்பொழுது எதிரிகள் தன்னிச்சையாக ஒப்புக்கொண்ட ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் இருவரும் முன்னிலையிலும் பதிவு செய்தார்கள் என்றும் அதில் நானும் எனது நண்பர் வீரக்குமார் என்பவரும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்துவிட்டு தற்பொழுது எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>1 **TO** 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் பச்சார் கவுண்டர் பாளையம் சென்ற பொழுது எத்தனை போலீசார் வாகன தணிக்கையில் ஈடுபட்டு கொண்டு இருந்தார்கள் என்றால் மூன்று அல்லது நான்கு போலீசார் இருந்தார்கள். அவர்களுடைய பதவி குறித்து எனக்கு தெரியாது. பொதுமக்கள் நிறைய நபர்கள் இருந்தார்கள். என் முன்னிலையில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மதுவின் பெயர் எனக்கு தெரியாது மூன்று பெரிய பாட்டிலும் மற்றவை சிறிய பாட்டில்களாக இருந்தது. நான் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க காவல் நிலையத்தில் கையொப்பம் செய்து விட்டு சம்பவஇடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.02.19 19:02:05 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**